முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1356

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

16.06.2023, வெள்ளிக்கிழமை

1. பார் போற்ற மாதருமத்தை
   பசிப்பிணி விரட்டும் நோக்கமாக
   பார்எங்கும் செய்து வரும் அரங்கனே
   பரோபகார ஞான தேசிகனே
2. தேசிகனே உன் அவதாரத்தை
   தெய்வீக தன்மை பெருகிவர
   ஆசி தந்து சுப்ரமணியர் யானும்
   அரங்கன் நீகேட்க ஞானஅறிவுரை ஆசி
3. ஆசிதனை சோபகிருது மிதுனதிங்கள்

(சோபகிருது வருடம் ஆனி மாதம் 01ம் நாள், 16.06.2023, வெள்ளிக்கிழமை)

   அரங்கனுக்கு சக்திகூட எடுத்துரைப்பேன்
   உரைக்கவே அரங்கமகா சக்தியாக
   உலகமெங்கும் அறம் சக்தி நிரம்பி வர
4. குறைவின்றி தர்மம் நடக்கின்ற
   கூறிடுவேன் எல்லைகள் எல்லாம்
   இறைவனாக யான் இறங்கி இனிதே
   எல்லோர்க்கும் இயற்கையோடு சர்வபலம்
5. பலம் தந்து அரங்கன் நீவேண்ட பாதுகாப்பும் கூட்டி அருள்புரிவேன்
   வலம் வந்து ஓங்காரக்குடில் தன்னை வணங்கி தர்மத்தில் உதவி
   சலனமற அருள் அமுதுதனை உண்டு
   சன்மார்க்கமே சிறந்த மார்க்கமென
6. என உலகில் மக்களெல்லாம்
   இணைந்து அரங்கன் திருவடி பற்றி
   ஞானம் பயின்றால் இந்த உலகில் சடுதி
   ஞானயுக மாற்றம் நடக்கும்

7. நடக்கவே ஞானவான்கள் தலைமை கொண்ட
ஞானிகள் ஆட்சி ஞானஆட்சி
தானாக உலகில் மாற்றம் பெறும்
தர்மவான்கட்கே வாய்ப்பாக நிரம்பி நிற்கும்
ஞானஅறிவுரை ஆசி முற்றே

–சுபம்–